நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 38/2022**

அ.சா. 1 (LW – 3 ) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ் | த/பெ. | : | பொன்னுசாமி |
| கிராமம் | : | கனகபுரம் | வட்டம் | : | மொடக்குறிச்சி |
| தொழில் | : | கூலி வேலை | வயது | : | 26 |

20–01–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

6வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1 முதல் 5, 7 முதல் 9, 11, 12ம் எதிரிகள் ஆஜர். 10ம் எதிரி இறந்துபோய்விட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் மொடக்குறிச்சி தாலுக்கா, கனகபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். நிகழ்நிலை புகார்தாரர் தமிழ்செல்வனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவுமே தெரியாது. சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் உடல்நிலை சரியில்லை என்று ஈரோடு, அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று அங்கு நின்றுகொண்டிருந்தேன். அந்த சமயத்தில் ஒரு போலீசார் வந்து எந்த ஊர் என்று என்னை விசாரித்தார். நான் எனது பெயர் மற்றும் முகவரியை சொன்னேன். கையெழுத்து போடுமாறு கேட்டதால் நானும் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். எதற்காக கையெழுத்து கேட்டார்கள் என்று சொல்லவில்லை. அதன்பிறகு நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். வேறு எதுவும் இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அனுமதி கோரினார். சாட்சியின் வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.01.20 18:14:38 +0530

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் தவறு. புகார்தாரர் தமிழ்செல்வனை எனக்கு தெரியும் என்றால் தவறு. 1வது எதிரி வீரமணிக்கும், புகார்தாரர் தமிழ்செல்வனுக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது எனக்கு தெரியும் என்றால் தவறு. 06-06-2019ம் தேதி மதியம் 2.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி தமிழ்செல்வனை அபாகரமான ஆயுதங்களால் தாக்கி அவரை ஈரோடு இரயில்நிலையம் அருகே உள்ள சாய் பைனாஸ் அலுவலகத்தில் இருந்து 1வது எதிரியின் வீட்டிற்கு கடத்தி சென்று அடைத்து வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் இல்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2026.01.20 18:14:47 +0530

II Addl. Sessions Judge, Erode.